பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 08 2024 **THURSDAY** 7 15 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - <u>செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பாரிஸ் ஒலிம்பிக் ஹாக்கி போட்டியில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது

2. இந்தியா – நியூஸிலாந்து இடையேயான நல்லுறவுகள் தொடர்ந்து மேம்பட்டு வருவதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, தெரிவித்துள்ளார்.

3. கோவிட் பெருந்தொற்று காலத்திற்குப் பின்னர், முதலீட்டுச் செலவினம் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

4. வக்ஃப் வாரிய சட்டத்திருத்த மசோதா கூட்டு நாடாளுமன்ற குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

5. இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தில் பொதுமக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

>>>><<<<

இந்தியா – நியூஸிலாந்து இடையேயான நல்லுறவுகள் தொடர்ந்து மேம்பட்டு வருவதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, தெரிவித்துள்ளார்.

மூன்று நாடுகள் பயணத்தின் இரண்டாம் கட்டமாக நியூஸிலாந்து சென்றுள்ள குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்முவுக்கு அந்நாட்டு கவர்னர் ஜென்ரல் திரு. **Dame Cindy Kiro** மற்றும் பிரதமரை சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள திருமதி. திரௌபதி முர்மு, இந்த பேச்சுக்கள் ஆக்கபூர்வமான முறையில் அமைந்ததாக கூறியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, வெலிங்டனில் அந்நாட்டு கவர்னர் ஜென்ரல் அளித்த விருந்து நிகழ்ச்சியில், குடியரசுத்தலைவர் பங்கேற்றார்.

நியூஸிலாந்து பிரதமர் திரு. **Christopher Luxon,** மூத்த அமைச்சர்களும் இதில் கலந்து கொண்டனர்.

**>>>><<<<**

நிலச்சரிவால் மிக மோசமான பாதிப்பை சந்தித்துள்ள கேரள மாநிலம், வயநாட்டிற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை மறுநாள் செல்கிறார்.

புதுதில்லியிலிருந்து கண்ணூர் விமான நிலையம் செல்லும் பிரதமர், அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் வயநாடு சென்று, பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடுவதுடன், முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை சந்தித்து ஆறுதல் கூறுகிறார்.

பிரதமரின் வருகையை ஒட்டி, விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>><<<<

கோவிட் பெருந்தொற்று காலத்திற்குப் பின்னர், முதலீட்டுச் செலவினம் தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் நடப்பாண்டிற்கான நிதி மசோதா மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அவர், சென்ற நிதியாண்டைக் காட்டிலும் முதலீட்டுச் செலவினம் 15 லட்சம் கோடி ரூபாய் அல்லது 18 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதன் மூலம், நாட்டின் சுகாதார காப்பீடு உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கு அதிக நிதி வழங்கப்படுவதாக அவர் கூறினார்.

முன்னதாக, இந்த மசோதா மீதான விவாதத்தில், காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்து கட்சிகளின் உறுப்பினர்கள் பங்கேற்று பேசினர்.

>>>><<<<

வக்ஃப் வாரிய சட்டத்திருத்த மசோதா கூட்டு நாடாளுமன்ற குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மக்களவையில் இந்த மசோதாவை தாக்கல் செய்து பேசிய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு, இந்த சட்ட மசோதாவில் மேலும் திருத்தங்களை மேற்கொள்ள அரசு தயாராக உள்ளதாக கூறினார்.

எந்வொரு மத அமைப்புகளின் செயல்பாடுகளிலும் தலையிடும் நோக்கில் இந்த மசோதா கொண்டுவரப்படவில்லை என்று அவர் தெளிவுபடுத்தினார்.

இஸ்லாமியர்களில் பின்தங்கிய மற்றும் ஏழை மக்களுக்கு நீதி வழங்குவதற்காக இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருப்பதாகவும், இதனை கொண்டு வர மத்திய அரசுக்கு உரிமை உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், முந்தைய அரசுகளால் அமைக்கப்பட்ட பல்வேறு குழுக்கள் மற்றும் சச்சார் குழுவின் பல்வேறு பரிந்துரைகளின் அடிப்படையிலேயே இந்த சட்ட மசோதா கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், வக்ஃப் வாரிய செயல்பாடுகளில் தலையிடும் நோக்கம் இல்லை என்றார்.

வக்ஃப் வாரிய சொத்துக்களை திறம்பட நிர்வகிப்பதை உறுதி செய்யவும், அவற்றின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காகவும் இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக திரு. கிரண் ரிஜிஜு கூறினார்.

முன்னதாக, இந்த மசோதாவுக்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன.

>>>><<<<

பாரதிய விமான மசோதா 2024-ஐ சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு, மக்களவையில் இன்று தாக்கல் செய்தார்.

அப்போது பேசிய அவர், விமான சட்டங்களில் கடந்த பல ஆண்டுகளில் பல்வேறு திருத்தங்கள் கொண்டு வரப்பட்டதாகவும், அவற்றின் காரணமாக, குழப்பங்கள் நீடிப்பதை கருத்தில் கொண்டு தற்போது இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.

புதிய மசோதா மூலம், எந்தவொரு விமான நிறுவனங்களுக்கும் மத்திய அரசு விதிகளை வகுக்க முடியும் என்பதோடு, விமான செயல்பாடுகளின் பாதுகாப்பையும் உறுதி செய்ய முடியும் என்று தெரிவித்தார்.

விமானங்கள் விபத்துக்குள்ளாகும் பட்சத்தில், அது தொடர்பான விசாரணைக்கு அரசு விதிகளை வகுக்கும் நோக்கத்துடன் இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக திரு. ராம்மோகன் நாயுடு கூறினார்.

>>>><<<<

அணுசக்தி உற்பத்தியில் சுயசார்பு நிலையை எட்டுவதற்கான தொடர் முயற்சிகளை மத்திய அரசு எடுத்து வருவதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதனை தெரிவித்த அவர், அணுசக்தியில் ஒருங்கிணைந்த திறன் மற்றும் எரிபொருள் சுழற்சி தொழில்நுட்பங்களை இந்தியா மேற்கொண்டிருப்பதாக கூறினார்.

தற்போதைய அணுசக்தி நிறுவு திறன் 8 ஆயிரத்து 180 மெகாவாட் என்பதை வரும் 2031-32ஆம் ஆண்டிற்குள் 22 ஆயிரத்து 480 மெகாவாட்டாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு. ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

>>>><<<<

பாரிஸ் ஒலிம்பிக் ஹாக்கிப்போட்டியில் இந்தியா வெண்கலப் பதக்கம் வென்றது.

சற்றுமுன் முடிவடைந்த வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியா 2-1 என்ற கோல்கணக்கில் ஸ்பெயினை வென்றது.

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியா இதுவரை 4 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் **Aman Sehrawat** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் 57 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 11-0 என்ற புள்ளிக்கணக்கில் ரஷ்யாவின் Zelimkhan Abakarov-ஐ வென்றார்.

>>>><<<<

இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தில் பொதுமக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது,

புதுதில்லியில் இதுதொடர்பாக இன்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய கலாச்சாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. கஜேந்திரசிங் ஷெகாவத், தேசியக் கொடியை வீடுகளில் ஏற்றி, செல்ஃபோன்களில் படம் எடுத்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

கடந்த 2022ஆம் ஆண்டு முதல் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

வெளிநாடுகளில் கல்வி பயிலும் இந்திய மாணவர்களின் பாதுகாப்பை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதனை தெரிவித்த அவர், வெளிநாட்டில் உள்ள இந்திய மாணவர்களின் பாதுகாப்பிற்கு அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக கூறினார்.

உயர்கல்விக்காக பல்வேறு நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளும் மாணவர்கள், அங்குள்ள இந்திய தூதரகங்களில் பதிவு செய்வதற்கு ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

அதற்காக இணையதளத்தில் மாணவர்கள் விவரங்களை பதிவு செய்வதன் மூலம், அவர்களின் பிரச்சினைகளை உரிய நேரத்தில் தீர்க்க வாய்ப்பு ஏற்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதனிடையே, மாநிலங்களவையில் பேசிய வெளியுறவுத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங், வெளிநாட்டு சிறைகளில் உள்ள இந்தியர்கள் மற்றும் வெளிநாடுவாழ் இந்தியர்களின் நலன்களை பாதுகாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக தெரிவித்தார்.

>>>><<<<

பங்களாதேஷ் மற்றும் மேற்கு ஆசியாவில் நிலவும் தற்போதைய சூழ்நிலை குறித்து, இங்கிலாந்து அமைச்சர் திரு. டேவிட் லம்மி-யுடன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் ஆலோசனை நடத்தினார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவிட்டுள்ள திரு. ஜெய்சங்கர், இங்கிலாந்து அமைச்சர் தொலைபேசியில் தம்மை தொடர்பு கொண்டு பேசியதாகவும் அப்போது, இந்த விவகாரங்கள் குறித்து விரிவாக ஆலோசித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

>>>><<<<

நாட்டின் வனப்பரப்பு கடந்த ஐந்தாண்டுகளில் ஆயிரத்து 540 சதுர கிலோமீட்டர் அளவு அதிகரித்திருப்பதாக மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு. புபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதனை தெரிவித்த அவர், இந்த வனப்பரப்புகள் குறிப்பாக ஆந்திரா, தெலங்கானா, ஒடிசா, கர்நாடகா மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றார்.

சட்டவிரோதமாக வனப்பரப்பை அழிப்பதை கட்டுப்படுத்த கடுமையான சட்டங்களை அரசு அமல்படுத்துவதாகவும், ஜி.பி.எஸ் வாயிலாக கண்காணிக்கப்படுவதாகவும் திரு. புபேந்தர் யாதவ் கூறினார்.

>>>><<<<

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் துறையில் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளின் மூலமாக நாடுமுழுவதும் 20 கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. ஜித்தன் ராம் மாஞ்சி, உதயம் இணையதளம், பிரதமரின் விஷ்வகர்மா திட்டம் உள்ளிட்டவற்றின் மூலம் இந்த வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இணையதளம் மூலம் மட்டும் 4 கோடியே 80 லட்சம் பேர் வேலைவாய்ப்புக்காக பதிவு செய்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கடன் உத்தரவாத திட்டம், சுயசார்பு திட்டம் போன்றவற்றின் மூலமாகவும் வேலைவாய்ப்புகளை அதிகப்படுத்த தமது அமைச்சகம் முயற்சித்து வருவதாகவும் திரு. ஜித்தன் ராம் மாஞ்சி குறிப்பிட்டார்.

>>>><<<<

சர்வதேச பணநிதியத்தின் நிர்வாக இயக்குநரும், முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகருமான திரு. கிருஷ்ணமூர்த்தி சுப்பிரமணியன் எழுதிய **‘India @ 100 –** வளர்ச்சியடைந்த பாரதம் 2047’ என்னும் புத்தகம் சென்னையில் வெளியிடப்பட்டது.

இந்திய தொழில் வர்த்தக சம்மேளனம் சார்பில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் பேசிய திரு. கிருஷ்ணமூர்த்தி சுப்பிரமணியன், வரும் 2047ஆம் ஆண்டுக்குள் இந்தியப் பொருளாதாரம் 55 டிரில்லியன் டாலர் அளவை எட்டும் என்று கூறினார்.

மேலும் 8 சதவீத வளர்ச்சி இலக்கை நோக்கியும், ஐந்து சதவீத பணவீக்க விகிதத்தை கருத்தில் கொண்டும், வேகமான பொருளாதார வளர்ச்சியை இந்தியா அடைந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

>>>><<<<

அன்னையின் நினைவாக ஒரு மரம் என்ற இயக்கத்தின் ஒரு பகுதியாக இந்தியா - இலங்கை இடையே நட்புறவு அலங்கார வளைவு இன்று கொழும்புவில் திறந்து வைக்கப்பட்டது.